DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 43/2021

Prosecution witness – PW.5

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.முனீஸ்வரி | Caste: |
| Husband's Name | : முருகன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

21.11.2025 – 11.05 AM

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் தற்போது சின்ன உடப்பங்குளம் கிராமத்தில் குடியிருந்து துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரான கோட்டைச்சாமியை எனக்கு தெரியும். அவர் எனது பெரியம்மாவின் மகன் ஆவார். எதிரி வீரமருதுவை உள்ளூர்காரர் என்ற முறையில் தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு எனது தம்பி கோட்டைச்சாமியுடன் வீரமருது சண்டை போட்டது தொடர்பாக மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் எனது தம்பியான கோட்டைச்சாமி புகார் அளித்தார்.

2. இது தொடர்பாக மண்டலமாணிக்கம் போலீசார் சம்பவத்திற்கு மறுநாள் காலை 11.30 மணியளவில் கோட்டைச்சாமியின் வீட்டருகே வந்து விசாரித்தார்கள். அப்போது நானும், எனது வீட்டருகே உள்ள ஜெயா என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்ததால் போலீசார் எங்கள் இருவரிடமும் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டதால் நாங்கள் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. போலீசார் என்னை எங்கள் வீட்டருகே வைத்து விசாரித்தார்கள்.

என்ன தேதி என்று எனக்கு நினைவில் இல்லை. கோட்டைச்சாமி எனக்கு தம்பி உறவு முறை என்றால் சரிதான். நான் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். அந்த தாளில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தன என்று எனக்கு தெரியாது. எங்கள் வீடு சம்பவ இடத்திற்கு அருகில் தான் அமைந்துள்ளது.

2. நான் கூறியபடி போலீசார் கோட்டைச்சாமியின் வீட்டருகே வந்து விசாரிக்கவில்லை என்றாலும், நான் அங்கு வைத்து கையொப்பம் எதுவும் செய்து கொடுக்கவில்லை என்றாலும், கோட்டைச்சாமி எனது தம்பி என்பதால் அவர் பொய்யாக கொடுத்த வழக்கை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.11.21 17:34:42 +0530